Registered as a NewsPaper in Sri Lanka பக்கங்கள் : 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் : 02 ஏப்ரல் (03 - 04 - 1991) புதன்கிழமை ஓசை: 44

## பாதுகாப்புக் கருதி நிலையங்கள் இடமாற்றம்.

(நல்லூர்)

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளாகிய பகுதி மாணவர்களுக்கேயே பரீட்சை நிலையங்களின் பாதுகாப்புக் கருதி அந்த நிலையங்கள் வேறுபகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் மன்னார் மாவட்டப் பரீட்சார்த்திகள் முழங்காவில், பூநகரிப் பகுதியிலும், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் தர்மபுரம், முரசு (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு பொதுமக்கள் ராணுவத்தால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் ஆறு பொதுமக்களைச் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கரடியனாறு இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் வேப்பவெட்டுவான் இலுப்படிச்சேனைப் பகுதிக்கு வந்து கொண்டிருக்கும் போது இடையில் வைத்து ஆறு பொதுமக்களைச் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

## கரடியனாற்றில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழி மறித்துத் தாக்கியதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகர பொலிஸ் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரப் பொலிஸ் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டு அவரிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு நகரப் பொலிஸார் மீது இருதயபுரத்தில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் பொலிஸ் தரப்பில் ஒருவர் கொல்லப் (4ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து இராணுவத்தின் சடலங்களை கடற்படை பொறுப்பேற்றது

(யாழ்ப்பாணம்)

வேப்பங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்டு, கைப்பற்றப்பட்ட இருபத்திமூன்று இராணுவத்தினரின் உடல்களும் நேற்று பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையிடம் செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளால் கையளிக்கப்பட்டன.

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் இறந்த இராணுவத்தினரின் சடலங்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அரியாலைப் பிரதேச காரியாலயத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வாகனங்கள் மூலம் பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்த இருபத்திமூன்று உடலங்களும் பருத்தித்துறை இறங்குதுறையில் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு மீன்குடித் தோணிகளில் ஏற்றப்பட்டு மூன்றுமணியளவில் பருத்தித்துறைக் கடற்கரையில் தற்போது தரித்துநிற்கும் குமண கப்பலுக்கு அருகே கொண்டு சென்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

நான்கு முப்பது மணியளவில் சிறிலங்கா கடற்படை பிரதிப்படை ஒன்று பாதுகாப்பளிக்க பொருட்கள் ஏற்றும் படகு ஒன்றில் கடற்படை அதிகாரிகள் குமண கப்பலின் அருகே வந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையின் பொறுப்பதிகாரியிடம் இருந்து உடல்களைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

## விமானக் குண்டு வீச்சில் பூவரசங்குளத்தில் இருவர் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை 8-30 மணியளவில் பூவரசங்குளம் பாடசாலைக்கு முன்பாக சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

## சங்குப்பிட்டியில் குண்டுவீச்சு; பாதை சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்று கேரதீவு சங்குப்பிட்டிப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியதில் பாதை சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலை ஐந்து முப்பது மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கேரதீவு சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதியை நோக்கி குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின. இந்தத் தாக்குதலின் விளைவாக திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதை சேதமடைந்துவிட்டதாக அப்பகுதியிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்பிய பயணிகள் தெரிவித்தனர். இத்தாக்குதலில் பயணிகள் எவரும் காயமடைந்ததாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (லேசா)

## காரைநகரில் மோதல்; விமானக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாம், சீ-நோர் இராணுவ முகாம் பகுதிகளில் நேற்று முன்தினமிரவு 8.30 மணி தொடக்கம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று முன்தினமிரவு தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் சிறிலங்கா இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேற முயன்றனர். இவர்களுக்கு உதவியாக அவ்ரோ, ஹெலி என்பன தாக்குதல்களை மேற் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகள் ஆரம்பம் - ஹமில்டன் வணசிங்க

(கொழும்பு)

வவுனியா, மன்னார், கிளிநொச்சிப் பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளை ஒரேயடியாக ஒழித்துக்கட்டும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா இராணுவத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### அமலன், குகநாதன், பொஸ்கோ, சேது, நிதி

(யாழ்ப்பாணம்)

கரடியனாறு இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் புலிகள் தரப்பில் அமலன் (மகாதேவன் ராஜேஸ் குருக்கள் மடம், மட்டக்களப்பு), குகநாதன் (இரணசிங்கம் காரைதீவு, அம்பாறை) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

காரைநகர் சீநோர் காவலரணிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற முயன்ற சிறிலங்கா ராணுவத்தினருடனான மோதலில் பொஸ்கோ (கனகபதி சிறிரஞ்சன், அன்னாலை தெற்கு, கரவெட்டி), சேது (வீரசேகரம் கிருபாகரன் வேலணை மேற்கு, நாரந்தனை), நிதி ஆகிய மூன்று போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இலங்கைவங்கி, மக்கள்வங்கி; மக்கள் மயம் ஆக்கப்படாது

(கொழும்பு)

இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மக்கள் மயப்படுத்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நிதி அமைச்சு அறிவித்துள்ள செய்தியில் மக்கள் மயப்படுத்த திட்டம் எதுவும் இல்லை என்று கூறியுள்ளது.

இந்த வேளை கடந்த வருடம் டிசம்பர் மாதம் பிரதமரும் நிதி அமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்க இந்த இரு வங்கிகளும் மக்கள் மயப்படுத்தப்படும் என்ற செய்தி பொய்யானது என்று மறுத்திருந்தமை தெரிந்ததே.

## யூலை இறுதிக்குள் முழுமையாக மக்கள் மயம்

(கொழும்பு)

இவ்வாண்டு யூலை மாதத்திற்கு முன்பாக சகல போக்குவரத்துச்சபை டிப்போக்களும் மக்கள் மயப்படுத்தப்பட்டு விடும் என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் கூறியுள்ளார். நேற்று நிட்டம்புவ டிப்போ மக்கள் மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை கல்விப் பணிப்பாளர்களுக்கு கொழும்பில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளரால் எதிர்வரும் 8 ஆம் திகதி நடாத்தப்படவிருக்கும் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ் (4ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

**தேவை**

வாசித்த சம்போ, ஐடிக்க லோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா பேனா பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எண்; சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு த்துறை பிள்ளையார், யாழ்ப் பாணம். (B.2169)

**நியூ வெல்ரோன் எலக்ரோனிக் கோஸ்**

ரீவி, டெக், றேடியோ, மணிக்கூடு, மிதிவண்டிகள் மற் றும் எல்லா உபகரணங்களும் திருத்தப்படுவதுடன், விற்பனை யாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரட் சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி ஓட்டுமடம், யாழ்ப் பாணம். (B- 2305)

**வெளிநாட்டுப் பணம் மாற்றிக் கொடுத்தல்**

எமது ஸ்தாபனத்தில் வெளி நாட்டுப் பணம் மாற்றிக் கொடுக்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்; ரவி அன் ராஜ் கெமிக்கல், 77, பெரியகடை, யாழ்ப்பா ணம். (B-2313)

**தேசத்தின் விடிவுக்காய் தன்னுயிரை அர்ப்பணித்த பாசத்தாய்க்கு எமது இதய அஞ்சலிகள் !**



★ சகல விதமான இரும்புப் பொருள்களுக்கும்
★ நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கும்
மற்றும்
வீட்டுக்குத் தேவையான பெயின்ட் வகைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட்டெட்

இல: 206, 208,
ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

(B/ 2306)

# நேர்முகப் பரீட்சை

பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப் பியோர் எமது தாவடி காரியாலயத்தில் 07 - 04 - 91 அன்று காலை 9 . 00 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகம் கொடுக்கவும்.

1 : தமிழ் சுருக்கெழுத்தாளர் / தட்டெழுத்தாளர்
2 : களஞ்சிய பொறுப்பாளர்
3 . நிர்வாக உத்தியோகத்தர்
4 ; கணக்கு விகிதர் .

(B-2307) தமிழீழ ஆய்வு நிறுவனம்

# விக்னா

## கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

# A/L 91

மீட்டல் பிரிவு 2
Day Classes

**ஆரம்பம்: 08-04-1991** (காலை 8.00 மணி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | : | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | : | திரு இரட்ணம் |
| கணக்கியல் | : | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | : | திருமதி. மதி |

மற்றும் அனைத்து பாடங்களும்.

மு, குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.

(B-2308)

# 90 ஆம் நாள் 125ஆம் நாள்

## நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்






| வீரவேங்கை கப்டன் அமலன் | | வீரவேங்கை யேக்கா | |
|---|---|---|---|
| தம்புத்துரைச்சாமி - விஜயசிங்கம் | | தம்புத்துரைச்சாமி - சீதாலட்சுமி | |
| மயிலிட்டி | (விஜயம்) | மயிலிட்டி | (சீதா) |
| வீரஜனனம் | வீரமரணம் | வீரஜனனம் | வீரமரணம் |
| 10 - 3 - 69 | 4 - 1 - 91 | 23- 6 -70 | 30- 11- 90 |

எமது மண்ணின் மைந்தன் அமலா - நீ
எங்களது குடும்பத்தின் ஒளிவிளக்கு
தேசத்தின் விடிவுக்காய் போராடினாய் அமலா - நீ
எதிரிகளின் படையை விரட்டியே அடித்தாய்
உனது கனவுகள் ஆயிரம் ஆயிரம் அமலா - நீ
நினைத்தவற்றை நாமும் தொடருவோம்
எங்கள் தியாகத்தின் வேங்கை யேக்காவே
உன் லட்சியம் நாம் மறவோம்
உன் செயல்கள் எல்லாம் எம் மனத்தில் நிற்கின்றன
உங்கள் கனவுகள் நனவாகட்டும்.

இந்த அறிவித்தலை ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் 3- 4- 91 இல் கனால் வீதி, மாத கலிலுள்ள கு. காங்கேசமூர்த்தி அவர்களது இல்லத்தில் சமுகம் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்;

கனால் வீதி, மாதகல். கு: காங்கேசமூர்த்தி

(B-2209)



# நினைவு கூருகின்றோம்

## 1991 - 04 - 03

1985ஆம் ஆண்டு இத்தினத்தில் மட்டக் களப்பு கொடுவாமடுவில் ஈரோஸ் இயக்கத் தினர் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது நடாத்திய தாக்குதலின் போது எதிர் பாராத விதமாக உயிரிழந்த
கோப்பாய் வெளியைச் சேர்ந்த சி. துவராசா
உட்பட இரு போராளிகளையும்

**இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

தாயக மண்ணின்
விடியலுக்காக
ஓய்வின்றி உழைத்த
உத்தமர் வரிசையில்
பெயரினைப் பொறிக்கும்
பேறினைப் பெற்றீர்!

சீறிவந்த சிறிலங்கா
அதிரடிப் படைகளையே
வீறுடன் எதிர்த்து - ஈழ
வித்தாக வீழ்ந்தீர்!

வரலாறு படைத்தீர்
வாழ்ந்த காலம் - இனி
வரும் சந்ததியின்
பாடப் புத்தகம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2189)

### சிந்தனைக்கு

வெற்றி அடைவதில் மிகக் கடினமானது என்னவென்றால், ஒருமுறை வெற்றி அடைந்தபின் தொடர்ந்து வெற்றி அடைந்துகொண்டேயிருக்க வேண்டும்.

— இர்விங்பெர்லின்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 03.04.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# எழுபது வருட ஆட்சியும் ஏழு வருட நிர்வகிப்பும்

உலகின் முதலாம்தர வல்லரசுகளில் ஒன்றான சோவியத் யூனியனின் எதிர்காலம் இன்று பெரும் கேள்விக்குரியதாக மாறிவிட்டது. எழுபது வருடத்திற்கு மேலாக கம்யூனிச ஆட்சி நிலவிய சோவியத் ரஷ்யாவில் கம்யூனிசம் சாதித்தது என்ன என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

சோவியத் யூனியன் இன்று பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. சோவியத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களின் ஒரு தொகுதியைக் கடனாகக் கொடுத்துதவ இந்தியா முன்வந்துள்ளது என்பதில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம். நாட்டில் என்றுமில்லாதவாறு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள அதேவேளை பொருளாதார நெருக்கடியும், அரசியல் நெருக்கடிகளும் தீவிரமடைந்து வருகின்றன.

நாட்டில் பல இலட்சம் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கி உள்ளார்கள். இதனால் பெருமளவு உற்பத்தி வீழ்ச்சியடைந்து பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. போராட்டம் தொடர்ச்சியாக இடம் பெறுமானால் நாட்டில் பொருளாதாரம் படுத்துவிடும் எனவும் நாடு என்றும் இல்லாத நெருக்கடியை எதிர் நோக்கும் எனவும் சோவியத் ரஷ்யாவின் பிரதமர் எச்சரிக்கை செய்துள்ளதோடு, அதை நிவர்த்தி செய்ய தொழிலாளரை வேலைக்குத் திரும்புமாறு கோரிக்கையும் விடுத்துள்ளார்.

உலகில் மிகக் கூடுதலாக பெற்றோலியத்தை உற்பத்தி செய்யும் நாடான சோவியத்தின் எண்ணெய் உற்பத்தியும் ஏறக்குறைய பாதி அளவில் குறைந்து விட்டது எண்ணெய் உற்பத்திக்கான உபகரணங்களின் பற்றாக்குறையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் நாட்டை பலவீனப்படுத்திக் கொண்டிருக்கையில் சோவியத் குடியரசுகளில் பல சுயாட்சி கோரிப் போராட்டங் களைத் தொடுத்துள்ளன. இதில் சில குடியரசுகள் சோவியத் யூனியனின் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்வதற்கான முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இவற்றுள் போல்டிக் குடியரசுகள் பிரிந்து செல்வதற்கான மக்களின் அனுமதியையும் பெற்றுள்ளன.

இவற்றைத்தவிர, சோவியத் யூனியன் எங்கும் பரவலாக இன்றைய ஜனாதிபதி கொர்பச்சேவிற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்தும் வருகின்றன. ஜனநாயகச் சீர்திருத்தம் கோரியும், அதிகாரங்களைப் பரவலாக்கக் கோரியும், பதவி விலகுமாறு கோரியும் போராட்டங்கள் தீவிரமாகவுள்ளன. இந்த எதிர்ப்புப் போராட்டத்திற்கு ரஷ்யக் குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் தலைமை தாங்குவதாகத் தெரிகின்றது.

இந்நிலையிலும், சோவியத் ஜனாதிபதியின் 'பெரஸ்ரொய்கா' நடவடிக்கைகள் தொடர்கின்றன. இறுதியாக வோர்சோ அணியும் கலைக்கப்பட்டுவிட்டது.

மேற்கூறிய சம்பவங்கள் பலவற்றையும் நோக்கும் போது கடந்த எழுபது வருடங்களுக்கு மேல் சோவியத் யூனியனில் நடந்தது என்ன? கடந்த எழுபது வருடங் களில் சோவியத் யூனியன் முதலாம்தர வல்லரசாக வளர்ச்சி அடைந்ததாகக் காட்டிக்கொண்டமையும், அவற்றிற்கு உலகம் செவி சாய்த்ததும் எந்தளவிற்கு உண்மை என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

கம்யூனிச சித்தாந்தத்தின் மூலம் தீர்த்துவைக்கப் பட்டதாகக் கூறப்பட்ட தேசிய இனப்பிரச்சினைகள், இன்று முதலாளித்துவ நாடுகளில் தீர்த்து வைக்கப் பட்ட அளவில்கூட, சோவியத்தில் தீர்வு எவையும் எட்டப்படவில்லை என்பதே இன்றைய நிலையாகும். அதேபோன்றே பாட்டாளி வர்க்கத்தினரதும், தொழிலாள வர்க்கத்தினரதும் பிரச்சினைகளும் தீர்க்கப்படவுமில்லை எனத் தோன்றுகின்றது.

இந்நிலையில், மேற்கத்தைய அணியினர் கூறுவது போன்று முழுமையாக மக்கள் எதுவித சுதந்திரமும் அற்றவர்களாக சோசலிச சோவியத் யூனியனால் அடக்கி ஒடுக்கப்பட்டார்களா? அல்லது சோவியத் யூனியனில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள இன்றைய தலைமையினால் சோவியத்தை வழிநடத்த முடியாமல் போய்விட்டதா?

எது எவ்வாறு இருப்பினும் சோவியத் யூனியன் இன்று நெருக்கடியில் உள்ளது என்பது மட்டும் உண்மை. கடந்த காலத்தில் மக்கள் அங்கு முழுமையான அடக்குமுறைகளின் கீழ் இருந்திருந்தால் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டது போன்று வன்முறை தலைதூக்குவதும் ஆட்சியாளர்கள் விரட்டப் படுவதும் தவிர்க்கப்பட முடியாமல் போகலாம். அதேவேளை, சோவியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் உலகில் சோவியத் தனது முதன்மையை இழந்துவிட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

# பொருளாதாரத்தடை என்னும் பூட்டு உடைக்கப்படல் வேண்டும்

**- வன்னிப் பிராந்தியத் தளபதி பால்ராஜ்**

(நமது நிருபர்)

பொருளாதாரத் தடை என்னும் பூட்டு உடைக்கப்படடு, எமக்குத் தேவையானவற்றை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என வன்னிப் பிராந்திய தளபதி பால்ராஜ் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 8-3-91 தொடக்கம் 30-3-91 வரையிலும் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட கண்காட்சி நிகழ்வையொட்டி வன்னிப் பிராந்திய தளபதி பால்ராஜ் அனுப்பிய ஆசிச்செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் ஆசிச் செய்தியினை கோபி அவர்கள் மக்கள் முன் வாசித்துக் காட்டினார். அவ் ஆசிச் செய்தியில், தமிழீழ மண்ணை இனவாத இலங்கை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதற்காக தொடர்ந்து யுத்தம் புரிந்து வரும் நாம் எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கேற்பவும், எதிர்கால சுபீட்சமான வாழ்விற்காகவும் இன்று தமிழீழமெங்கும் பல வேலைத் திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

தமிழீழ மக்களாகிய நாம் இன்று பல சவால்களை சந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம். சிறிலங்கா அரசு படைபலம் மூலம் சாதிக்க முடியாததை பொருளாதாரத் தடை சாதிக்கும் என நம்புகின்றது.

சகல வளமும் கொண்ட தாயகபூமி செழிக்க வேண்டும் தமிழ் மக்களாகிய நாம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதன் மூலம் எம் பொருளாதாரத்திற்கு தோள் கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக் கண்காட்சிக்கான ஒழுங்குகளை தமிழீழ ஆய்வு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் ராஜன் மேற்கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மக்களும் மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

கண்காட்சி நடைபெற்ற மூன்று நாள்களும் மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொருளாதார தடைக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கவிதை, பட்டிமன்றம், பேச்சுக்கள், விவசாயப் போட்டி, நாடகம் என்பன நடைபெற்றன.

கண்காட்சியில் வைக்கப்பட்ட தரமான பொருள்களுக்கு பரிசில்களும் வழங்கப் பட்டன.

# ஆப்கான் கோஸ்ட் நகர் முகைதீன்கள் வசம்

ஆப்கானிஸ்தானின் எல்லை ஓர நகரான கோஸ்ட் நகரை முகைதீன் கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளதாக மேற்கத்தைய இராஜ தந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

பல நாட்கள் நடந்த சண்டையின் பின்னர் கோஸ்ட் நகரைக் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கும் கெரில்லா இயக்கத்தினர் 2200 இராணுவ வீரர்களை தாம் கைதுசெய்துள்ளதாகவும், அரச டாங்கிகளையும், ஹெலிகொப்டர்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## சங்கத்தில் கொள்ளை

(செ.துரை)

அச்சுவேலி ப.நோ.கூ சங்கத்தின் 14 ஆம் இலக்க சிறுப்பிட்டிக் கிளை ஞாயிற்றுக்கிழமை 31-3 91 இரவு பின் கதவு உடைத்துத் திருடப்பட்டுள்ளது.

சங்கத்தின் பின் அறையொன்றின் சிறிய இரும்பு பட்டமொன்றை உடைத்து கதவின் மேல் நிறாங்கை கழற்றிவிட்டு உட்புகுந்து, உள் அறையின் வெளி யன்னல் கதவு ஒன்றின் ஒரு பாகத்தை அகற்றி பாதுகாப்பிற்காக போடப் பட்ட இரும்பிளை வளைத்து அவ் வழியாக உட்புகுந்த திருடர் சவர்க்காரம், விட்டமின் ரெஸ்டமோல்ட், லக்ஸ்பிறே கௌபி, தீப்பெட்டி, கைலண்டி பால்மா போன்ற பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

**மேற்காசிய தீர்விற்கு**

# சர்வதேச மாநாடு ஒன்று அழைக்கப்பட வேண்டும்

(கெய்ரோ)

மேற்காசியப் பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச மாநாடு ஒன்று அழைக்கப்பட வேண்டுமென்று எகிப்தும் சிரியாவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நேற்று முன்தினம் கெய்ரோவில் சந்தித்த எகிப்திய ஜனாதிபதி முபாரக்கும் சிரியா ஜனாதிபதி அஸ்வத்தும் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

வளைகுடாப் பகுதியில் அமைதிச் சூழல் ஏற்படுத்தப் பட்ட பின்னர் அங்கிருக்கும் வெளிநாட்டுத் துருப்புக்கள் வெளியேறிவிட வேண்டும் என்றும் அந்த இரு ஜனாதிபதிகளும் கேட்டுக் கொண்டனர்.

# மனங்களிலே பதிந்து விட்ட மேஜர் செங்கதிர்

**- கோபி**

(நமது நிருபர்)

நாங்கள் சந்தித்துக்கொண்டிருக்கும் மரணங்களில் பல சில காலங்களின் பின் நினைவுபடுத்த முடியாத நிலையில் அழிந்து விடுகின்றன. சில நெஞ்சங்களிலேயே பதிந்து விடுகின்றன. அந்த வரிசையில் மேஜர் செங்கதிர் அவர்களுடைய நினைவும் ஒன்றாகும்.

இவ்வாறு கடந்த 25-3-91 அன்று மேஜர் செங்கதிரின் 31 ஆம் நாள் நினைவையொட்டி கிளிநொச்சி மேற்குப் பிரதேசத்தில் நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் 2500 வீரவேங்கைகளை இழந்த நிலையில் இருக்கும் நாம் போராட்டத்தின் இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கின்றோம். இந்த நிலையில் மேஜர் செங்கதிர் அண்ணா. அன்னை பூபதி போன்ற 2500 க்கு மேற்பட்ட மாவீரரை 500 வருடங்கள் ஆனாலும் மறக்க முடியாது என்று கூறினார்.

இக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட பிரதேசப் பொறுப்பாளர் இலக்கியன் தலைமையில் இடம் பெற்றது.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் பிறபாகங்களிலும், கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும், துணுக்காய் பிரதேசத்திலுள்ள மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் நினைவஞ்சலிக் கூட்டங்கள் இடம் பெற்றன.

**காலகட்ட வரலாற்றுப் பிரக்ஞைகள்**

# பாத்திரத்தினூடே வெளிப்படுத்த வேண்டும்

**- பேராசிரியர் சிவத்தம்பி**

(யாழ்ப்பாணம்)

பிழையான சரித்திர நூல்கள் எம்மிடையே வரும்போது அவற்றைக் கொளுத்துவோம். ஆண்டு ஆறு, ஒன்பது புத்தகங்களிலும் இவ்வாறான தவறுகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற செங்கை ஆழியானின் 'குவேனி' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழ்த்தாய் பதிப்பகத்தின் சார்பில் நடத்தப்பட்ட இந்த விழாவுக்கு வல்லை வளவன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த விழாவில் உரையாற்றிய பேராசிரியர் சிவத்தம்பி உலகத்தில் தலைசிறந்த வரலாற்று நாவல்களை எடுத்துக்கொண்டால் கதையைவிட கதை நடந்த காலத்தின் பிரச்சினைதான் முக்கியமாக இருக்கும்.

வரலாற்று நூல்களை எழுதும்போது அந்தக் காலகட்டத்தில் வரலாற்று பிரக்ஞை பாத்திரங்களினூடே வெளிப் படுத்தப்படவேண்டும்.

'குவேனி' நாவல் ஐதீகமாக இருந்தாலும் காணிக்கந்தோர் ஜீ ஏயின் கதை என்பது தெரியவே தெரிகிறது. தமிழ் நாவல் உலகப்பரப்பில் இன்னும் வரவில்லை. சிறுகதை என்ற வகையில் இது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கதை. எழுத்துத் துறையைப் பொறுத்தவரை எழுதப்படுபவற்றைவிட எழுதுபவனும் முக்கியம்.

பதிலுரை நிகழ்த்திய திரு செங்கை ஆழியான் அவர்கள் விஜயனின் காலத்துக்கு முன்பே இங்கு ஒரு நாகரிகமான மனித கூட்டம் இருந்தது என்பதை உறுதிப்படுத்துவது குவேனி நாவல் எழுதியதன் ஒரு நோக்கம் என்றார். திரு. நவி, சோ. கிருஷ்ணராஜா உட்பட பலர் இந்த விழாவில் உரையாற்றினர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா 500 பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

# காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்க கொள்கையில்மாற்றம்எதுவுமில்லை

(வாஷிங்டன்)

காஷ்மீர் விவகாரம் சிம்லா உடன்படிக்கையின் அடிப்படையிலேயே தீர்க்க வேண்டும் என்ற அமெரிக்கக் கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லையென அமெரிக்க அரசின் விவகாரத்துறை அமைச்சர் றொபேட் கின்னத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவர் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்லவென குறிப்பிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் தமது பலத்த ஆட்சேபனையை அமெரிக்காவிற்கு தெரிவித்திருந்தது.

இதன் பின்னர் அமெரிக்க வெளியுறவு அதிகாரிகளும் நேற்று முன்தினம் அமெரிக்க அரசியல் விவகார அமைச்சரும் அமெரிக்க தூதரின் கருத்திற்கு மறுப்புத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு செயற்கைக்கோள் வழியாக நடத்தப்பட்ட செய்தியாளர்களின் கூட்டத்தில் இந்திய, பாகிஸ்தானிய செய்தியாளர்களு(க்கு)

றொபேட் கின்னத்

பதிலளிக்கும்போதே காஷ்மீர் சம்பந்தமான அமெரிக்க கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லையெனத் தெரிவித்தார்.

# ஆப்கான் விவகாரத்தில் ஐ. நா. தலையிடவேண்டும்

## -நஜி புல்லா

(காபுல்)

ஆப்கானிஸ்தானத்தின் பாகிஸ்தானிய எல்லையில் உள்ள கோஸ்ட் நகரை முஜாகிதீன் கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளனர் என்பதை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா ஒப்புக்கொண்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி நஜிபுல்லா ஐ நா. சபைக்கு அனுப்பியுள்ள அறிக்கையொன்றில் ஆப்கானிஸ்தானத்தில் நிலவும் பதட்டத்தை ஐ நா பாதுகாப்புச்சபை தலையிட்டு நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அத்துடன் கோஸ்ட் நகரத்தை முஜாகிதீன் கெரில்லாக்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றார்கள் என்பதையும் ஒப்புக்கொண்டார்.

இதேவேளை ஐ நா.சபையின் பொதுச்செயலாளர் பெரஸ் டிகெயியா கைப்பற்றிய பிரதேசத்தில் இருந்து கெரில்லாக்கள் விலகவேண்டும் என்றும் அந்தப் பிராந்தியம் அமைதியாக இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் அந்தப் பிராந்திய நாடுகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

### பாதுகாப்புச்சபையில் உள்ள

# அணிசேரா நாடுகளினால் முடிவு எட்ட முடியவில்லை

(வாஷிங்டன்)

பாரசீக வளைகுடாவில் நிரந்தரப் போர் நிறுத்தத்துக்கான அமெரிக்கா தயாரித்த தீர்மானம் குறித்து ஒரு பொது முடிவுக்கு வருவதற்கு ஐ நா. பாதுகாப்புச் சபையிலுள்ள அணிசேரா நாடுகள் தவறிவிட்டன.

ஈராக்கில் செயற்படுத்துவதற்கு கடுமையான நிபந்தனைகளை இத்தீர்மானம் விதிக்கிறது. ஆனால் இத்தீர்மானத்தை ஈராக் ஏற்றுக்கொண்டால் அதன் மீதான தடைகளை அகற்றுவது பற்றி இந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் எதுவும் கூறவில்லை என்று சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். வெளிநாட்டுத் துருப்புக்களின் படை விலகலுக்கான கால அட்டவணைப் பற்றியும் அத்தீர்மானம் எதுவும் தெரிவிக்கவில்லை. இரசாயனக் கிருமி ஆயுதங்களை அழிப்பதென்ற தீர்மானம் ஈராக்கின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அமைகிறது என்று சில உறுப்பினர் தெரிவித்தனர்.

### வளைகுடாப் போரினால்

# விமான நிறுவனங்களுக்கு 200 கோடி டொலர் நஷ்டம்

வளைகுடாப் போரினால் ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வு காரணமாக விமான நிறுவனங்களுக்கு 200கோடி டொலருக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச விமானப்போக்குவரத்து சேவை அறிவித்தது.

நேற்றுமுன்தினம் மேற்படி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் 1991ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் விமான நிறுவனங்களுக்கு 200கோடி டொலருக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தது.

# சீனாவில் உணவிற்குப்பதில் சோவியத்'ஜெட்விமானங்கள்

(பீக்கிங்)

சீனாவும், சோவியத்யூனியனும் உறவுகளை விருத்தி செய்து கொண்டுள்ளன என்று சோவியத் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார். 1957 க்குப் பின் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாஸ்கோவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். சோவியத்யூனியனின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உதவும் முகமாக சீனா உணவுப் பொருட்கள், கடன் ஆகியவற்றை வழங்கவுள்ளதுடன் சோவியத்தின் ஜெட் விமானங்களை நியாயமான விலையில் கொள்வனவுசெய்யவுள்ளது எனவும் ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

சீனத் தலைவர் எதிர்வரும் மே மாதம் மாஸ்கோவிற்கு விஜயம் மேற்கொள்வார். சோவியத் வெளியுறவு அமைச்சர் சீன வெளியுறவு அமைச்சர், சீனப் பிரதமர் உட்பட பல அரசுத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

கல்விப்

கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் இவ்வாரம் கொழும்பு செல்கிறார்

இந்தக் கூட்டத்தில் வடக்கு கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள உயர்தரப்பரீட்சையை திட்டமிட்டபடி சித்திரை 22ஆம் திகதி நடத்துவதற்கான கால அட்டவணையைத் தயாரிப்பதற்கும் வினாத்தாள்களைக் கொண்டுவருவது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

வருடப்போது பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை தன்னுடன் எடுத்து வருவதற்கான முயற்சிகளை தான் மேற்கொண்டுள்ளதாகவும் யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ச)

காரைநகரில்

கொண்டன இந்தத் தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் 'பசீலன் 2000' ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் எதிர்த் தாக்குதலால் சிறிலங்கா இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

கரடியனாற்றில்

களப்பு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் வேப்ப வெட்டுவானிற்கும் இலுப்படிச் சேனைக்குமிடையில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு

பட்டாரி அவிடமிருந்த எஸ் 84 ரகத் துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய மகஸீன் ஒன்றும், 80 ரவைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ஈ)

பாதுகாப்பு கருதி

மோட்டை ஆகியபகுதிகளிலும், வவுனியா மாவட்டப் பரீட்சார்த்திகள் கிளிநொச்சியிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஒழுங்குகளை பாதிக்கப்பட்ட பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்வார்கள். (ச)

யூலை

மக்கள் வைப்பிலிடப்பட்டிருந்த டிப்போ ஒன்றிலிருந்து ரூபா ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தொகை காணாமல் போயிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புலிகளை

தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூறியுள்ளார். அரசின் கட்டுப்பாட்டில் உள்ள செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த அவர் மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் கிராம மக்களிடம் கொடுத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைத்து விடும்படி கிராம மக்களைக் கோரும் துண்டுப் பிரசுரங்களை ஹெலிகொப்டர் மூலம் விநியோகித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

கடந்த ஒன்பது மாத காலமாக இராணுவம் மேற்கொண்ட பழிவாங்கும் தாக்குதல்களுக்குப் பின்னரும் கிராமமக்கள் இராணுவத்தின் வேண்டுகோளை ஏற்று ஆயுதங்களை ஒப்படைக்க முன்வருவார்களா என நேற்றிரவு பி. பி. சி. சந்தேகம் தெரிவித்தது.

# புலமைப்பரிசில் கிடைத்தாள் இன்று கொழும்பிற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த வாரம் நடாத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் இன்று திருத்த வேலைகளுக்காக கொழும்பிற்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வவுனியாவில் திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினாலேயே இது அனுப்பக் காலதாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# முத்தமிழ் விழாவை முன்னிட்டு சாவகச்சேரியில் அலங்காரம்

(செ. த. மை.)

முத்தமிழ்விழாவை முன்னிட்டு சாவகச்சேரி நகரமெங்கும் அலங்கரிப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் மூன்று இலட்சம் மக்கள் கலந்துகொள்ளக் கூடியளவுக்கு அரங்க அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

சாவகச்சேரி வட்ட வலைப் பிரதேசத்திற்குள் இருக்கும் 20 சிற்றூர்களைகள் தெருக்களில் அலங்கார வளைவுகள் அமைப்பதில் போட்டிபோட்டு செயல்படுகின்றன. இந்த அலங்கார வளைவுகளுள் சிறந்த வளைவுக்கு 5000. ரூபா பரிசு வழங்கப்படும் என்று வட்டப் பொறுப்பாளர் திரு வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

# துணிஆலை மூடியதால் 7,500பேர் வேலையிழப்பு

(சென்னை)

சென்னையில் நூறுவருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த பிரசித்திபெற்ற பக்கிங்காம் கர்னாட்டிக் பின்னிதுணி ஆலை நேற்று முன்தினம் மூடப்பட்டது. பொம்பாயிலிருந்த இந்த ஆலையின் நிர்வாகம் நேற்றுக் காலையில் திடீரென்று இந்த ஆலையை மூடியது.

கடந்த 16 ஆண்டுகளில் நான்காவது தடவையாக இப்படி மூடப்படும் இந்த ஆலையில் 5 200 நிரந்தரத் தொழிலாளர்களும், 2,300 தற்காலிகத் தொழிலாளர்களும் பணியாற்றினார்கள். ஆலையை நடாத்தப் பணமில்லை என்றும், வங்கிகள் உதவி செய்யவில்லை என்பதும் நிர்வாகம் காட்டும் காரணங்களாகும். ஆலையைத் தேசிய உடைமையாக்கவேண்டுமென்று தொழிலாளர் சார்பில் கோரப்படுகின்றது.

# ஞாபகார்த்தப் பேருரை

(நல்லூர்)

திருநெல்வேலி, பலாலி, ஆசிரியர் கலாசாலையில் நாளை வியாழக்கிழமை காலை 8. 30 மணியளவில் அமரர் பேராசிரியர் சோ கந்தையா ஞாபகார்த்தப்பேருரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தாவரவியற்துறைப் பேராசிரியர் கே. தெய்வேந்திரராஜா நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

# குவைத் மக்களுக்கு ஜனநாயக உரிமை வழங்குக

## -ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

குவைத்மக்களுக்கு அதிக பட்சமான ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் வலியுறுத்தி உள்ளார். குவைத் அமீருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்படி கருத்தை அதிபர் புஷ் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இத்தருணத்தில் வளைகுடாவில் நிரந்தர போர்நிறுத்தத்திற்கான ஐ நா பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் பயங்கரமானவை என்றும், ஈராக்கிற்கு எதிரானவை என்றும் ஐ நா. விற்கான ஈராக் தூதுவர் அல் அன்பாரி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

### அடுக்கவாரம் சிறிலங்கா-இந்தியா

# கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு கூட்டம்

(கொழும்பு)

இந்திய - சிறிலங்கா கூட்டுப்பொருளாதார ஆணைக்குழுவின் கூட்டம் அடுத்த வாரத்தில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரட்ண தலைமையிலான குழு ஒன்று செல்லவுள்ளது. அதிகாரிகள் மட்டத்திலான இந்த மாநாட்டையடுத்து இடம்பெறும் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவுமென்று கொழும்பில் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

### ஆசிய நகர் பிராந்திய

# சுற்றுப்புறச் சூழலுக்கு 3,35,000 டொலர் நிதியுதவி

(நியூயோர்க்)

ஆசியாவின் நகர்ப்பிராந்திய சுற்றுச்சூழல் திட்டத்திற்கென 3 இலட்சத்து 35 ஆயிரம் டொலர் நிதி ஐ நா சபையில் இருந்து ஒதுக்கியிருப்பதாக யூ. என். டி. பி. அறிவித்துள்ளது.

முன்னதாக ஆசிய நாடுகளின் நகர்ப் பிராந்தியசுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் முன்னோடித் திட்டமொன்றினை யூ. என். டி. பி. யிடம் சமர்ப்பித்திருந்தன.

இதனை ஆமோதித்த இந்த ஸ்தாபனம் இதற்கென 3 இலட்சத்து 35 ஆயிரம் டொலர் நிதியினையும் தமது நிதியில் ஒதுக்கியுள்ளது.

# முன்னாள் படையினர்

தமிழகத்தில் நடைபெற இருக்கும் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் சுமார் 25,000 முன்னாள் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுபவர்கள் எனதமிழக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.